தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035.
தொலைபேசி எண்.044–2951 5590

ஆணை நாள். 02.11.2026

முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண் : SA- 11307/A/2024

திருமதி.R.பாப்பாத்தி .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
சேலம் மாவட்டம் – 636 005. .. பொது அதிகார அமைப்பு

ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 02.11.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திருமதி.R.பாப்பாத்தி அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.சு.ரமேஷ், பொதுத் தகவல் அலுவலர் / வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 06.05.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், பட்டா ரத்து சம்மந்தமாக 21.06.2022 அன்று சமர்பித்த மனுவில் இணைத்து சமர்பித்த ஆவணங்கள் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர் 18.06.2024 நாளிட்ட பிரிவு 19(1)–ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை

தாக்கல் செய்துள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர், 27.08.2024 நாளிட்ட பிரிவு 19(3)–ன் கீழ் இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 02.11.2026 முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், ஏற்கனவே 05.02.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க அனைத்து இனங்களுக்கான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசியில் ஆஜரான மனுதாரரின் மகன், பொதுத் தகவல் அலுவலர் உரிய காலத்திற்குள் தனக்கு தகவல் வழங்கவில்லை எனவும், பட்டா ரத்து தொடர்பாக வருவாய் கோட்டாட்சியர், சேலம் அவர்கள் விசாரணை மேற்கொண்ட பொழுது எனது வாக்குமூலத்தினை வழங்கவில்லை எனவும், அதன் பின்னர் மனுதாரர் பிரிவு 6(1)இல் கோரிய தகவல்களை மனுதாரரையே நகல் எடுக்க வைத்ததாகவும், தகவல்களில் உரிய சான்றொப்பமிடவில்லை எனவும் ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் முழுமையான தகவல் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:–

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய முழுமையான தகவல்களை வழங்கும் நோக்கில், மாவட்ட வருவாய் அலுவலர், சேலம் அவர்கள்தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 18(3)(b)இன் கீழ் 1. திரு.ட்டி. கணேஷ்குமார், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் / வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் 2. அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் / வருவாய் கோட்டாட்சியர் 3. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் 4. தற்போதைய மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் 5. மனுதாரரையும் விசாரணைக்கு அழைத்து, விசாரணை மேற்கொண்டு, மனுதாரருக்கு அனைத்து இனங்களுக்கான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005–இன்படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)–ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் சேலம் மாவட்ட வருவாய்***

அலுவலரின் விசாரணை அறிக்கை நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 08.12.2026 அன்று நேரில் ஆஜராகி தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகின்றது.

ஒம்/– (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்கு எண் SA- 11307/A/2024
பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
சேலம் மாவட்டம் – 636 005.

உரிய விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு,
மாவட்ட வருவாய் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம் மாவட்டம்.

மனுதாரர்:
திருமதி.R.பாப்பாத்தி
ரெட்டிப்பட்டி,
மாரியம்மன் கோவில் பின்புறம்,
200, 1–வது கோட்டம்,
மாமாங்கம் அஞ்சல்,
சேலம் மாவட்டம் – 636 302.

Copy to File
Je/PA 02.11.2026